பக்கங்கள்: எட்டு

Registered as a News Paper in Sri Lanka

விலை ரூபா: 5-00

# வலம்புரி
VALAMPURI

நாளுக்கு நாள் மாறும்
நவ நாகரிக
ஆடை வகைகளுக்கு:
காவேரி
பட்டுச் சோலை
48, பெரியகடை வீதி
யாழ்ப்பாணம்
T. P 2333
(சி-2854)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 11 திங்கட்கிழமை (26-11-2001) தொலைபேசி: 3378 ஒலி 341

## நாளை மாவீரர் தினம்
### வன்னியில் பெரும் எழுச்சி

(வவுனியா)

வன்னிப் பெருநிலப் பரப்பில் நேற்றுக்காலை 8மணிக்கு தமிழீழக்கொடி ஏற்றும்வைபவத்துடன் மாவீரர் எழுச்சி நாள் ஆரம்பமாகியுள்ளது.

மாவீரர் நாள் ஆரம்பமானதை அடுத்துவன்னிப்பிரதேசம் சிவப்பு, மஞ்சள் கொடிகளினாலும் மாவீரர்நினைவு வளைவுகளாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது மாவீரர் அலங்காரப் பந்தல்கள் அமைக்கப்பட்டு அங்கு தமிழீழ மண் மீட்பிற்காக தம் இன்னுயிரை ஈர்ந்தமாவீரர்களின் திருவுருவப் படங்கள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ஈகச்சுடர்கள் ஏற்றப் பட்டுள்ளன.

இம் மாவீரர்களின் உருவப் படங்களுக்கு மக்கள் பெருமளவில் மலர் தூவிஅஞ்சலி செய்து வருகின்றனர் இதேவேளை மாவீரர்களின் பெற்றோர்களும் கௌரவிக்கப்பட்டு வருகின்றனர் நாளை நடைபெறவுள்ள மாவீரர் தினத்தை உணர்வு பூர்வமாகவும், எழுச்சி பூர்வமாகவும் கொண்டாட உள்ளனர். (ம)

## ஐ.தே.க - பொ.ஐ. முன்னணியை புலிகள் ஆதரிக்கமாட்டார்கள்
### சண்டேலீடருக்கு கரிகாலன் பேட்டி

சிங்களப் பேரினவாதக் கட்சிகளான பொதுஜன ஐக்கிய முன்னணியையோ அல்லது ஐக்கிய தேசியக்கட்சியையோ விடுதலைப்புலிகள் ஆதரிக்கமாட்டார்கள்.

இவ்வாறு மட்டக்களப்பு அம்பாறைமாவட்ட அரசியல் பொறுப்பாளர் கரிகாலன் சண்டேலீடர்பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசமான கொக்கட்டிச்சோலையில் வைத்து சண்டே லீடர் பத்திரிகைக்கு கரிகாலன் வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

பொ.ஐ.ஐ முன்னணி ஐ.தே.கட்சி ஆகிய இருகட்சிகளும் சிங்கள ஆதிக்கத்தை நிலைநாட்டும் கட்சிகள் இதனால்இக்கட்சிகளில் எதனையும்நாம் ஆதரிக்கமுடியாது. சிங்களக்கட்சிகள் சார்பாக தேர்தலில் தமிழர்கள் போட்டியிடுவதையும் விடுதலைப் புலிகள் விரும்பவில்லையென்று கரிகாலன் மேலும் தெரிவித்துள்ளார்,

### எதிர்வரும் பொதுத் தேர்தலில்
# ஐ. தே. கவுக்கு நகரங்களிலும் பொ.ஐ.முக்கு கிராமங்களிலும் ஆதரவு

## நிலையான ஆட்சி அமைவது கடினமே

(நமது அரசியல் நிருபர்)

**பன்னிரண்டாவது பாராளுமன்றத்திற்கான பொதுத்தேர்தலுக்கு இன்னமும் பத்துத்தினங்கள். இருக்கையில் தென்னிலங்கையில் வன்முறைச்சம்பவங்களுடன் தேர்தல் பிரசாரம் சூடு பிடித்துள்ளது சிங்கள பேரினவாதக் கட்சிகளான ஐ. தே. கட்சியும், பொ. ஐ. ஐ. முன்னணியும் ஒன்றை ஒன்று விஞ்சுமளவுக்கு தேர்தல் பிரசாரம் சூடு கிளம்பியுள்ளது. இந்நிலையில், நகர்ப்புறங்களில் ஐ. தே. கட்சி அலையும், கிராமப்புறங்களில் பொ. ஐ. முன்னணி அலையும் வீசுவதாக தெரிவிக்கப்படுகிறது,**

டிசம்பர் மாதம் 5ம்திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கோ, பொதுஜன ஐக்கிய முன்னணிக்கோ தனித்து நின்று ஆட்சி அமைக்க கூடிய பெரும்பான்மை பலம்கிடைப்பது கேள்விக் குறியாக உள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியையும கட்சித் தலைவர்ரணில் விக்கிரமசிங்காவையும் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனவையும் விடுதலைப் புலிகளுடன் தொடர்புபடுத்தி அக்கட்சி ஆட்சி அமைத்தால் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனே ஜனாதிபதி என்று சிங்கள கிராமப் புறங்களில் ஜனாதிபதி சந்திரிகா பேசிவருவதினால் அப்பேச்சுசிங்கள கிராம மக்களை நம்ப வைப்பதுடன் பொதுஜன ஐக்கியமுன்னணிக்கான வாக்கு வங்கியை நிரப்புவதாக உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தளவில் கொழும்பு பொலநறுவை மாவட்டங்கள் மற்றும் மலையகத்தில் கூடுத

[08ம் பக்கம் பார்க்க]

## தேர்தல் முடிந்ததும் சோமவன்ஸ நாட்டில் இருந்து பார்க்கட்டும்
### காமினி அத்துக்கோறளை சவால்

(கொழும்பு)

டிசம்பர் மாதம் 5ம்திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் முடிவடைந்த பின்னர் ஒருநாள்தன்னும் ஜே.வி.பித்தலைவர் சோமவன்ஸ நாட்டில் இருந்துபார்க்கட்டும் என்று ஐ.தே.கட்சியின் உப தலைவர் காமினி அத்துக்கோறளை சவால்விட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது.

ஜே.வி.பியின் தலைவராக சோமவன்ஸ அமரசிங்கா இருந்தகாலத்தில்தான் அப்பாவிஇளைஞர்கள் கொல்லப்பட்டனர் எனவே அவர்

(08ம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க-பொ.ஐ.மு. மோதல் இருஇடங்களில் இருவர்பலி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்களுக்கும் பொது ஜன ஐக்கியமுன்னணி ஆதரவாளர்களுக்கும் இடையே நேற்றுக் காலை வெவ்வேறுஇடங்களில் ஏற்பட்ட மோதலில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

பலாங்கொட பொது வர்த்தக நிலையத்திற்கருகில்இடம் பெற்ற மோதலில் ஐக்கியதே

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே. கட்சியின் திருமலை வேட்பாளர் விலகினார்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சி சார்பாக தேர்தலில் போட்டியிட்ட 5ம் இலக்க வேட்பாளா சட்டத்தரணி வரதன் தான் தேர்தலில போட்டியிடுவதிலிருந்து விலகிக்கொள்

(08ஆம் பக்கம் பார்க்க)

## இன்று பிரபாவின் பிறந்த நாள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 47வது பிறந்த தினம் இன்றாகும்.

[08ஆம பக்கம் பார்க்க]

உண்மையான சுதந்திரமும் சகோதரத்துவமும்
சமாதானமும் மலர மீன்சின்னத்திற்கு வாக்களியுங்கள்



சுயேச்சைக் குழு



X

தம்பிராசா சுபத்திரன் (றொபேட்) ஈ. பி. ஆர். எல். எவ்.

[சி-2925]

## இராசி பலன்

26. 11. 2001
(கார்த்திகை11 திங்கள்)
ஏகாதசி பி. இ 12.22
உத்தரட்டாதி பி. ப 12.57 வரை
ராகுகாலம் 7.42 - 9.12
நல்லநேரம் 12.12 - 1.42
உத்தானஏகாதசி விரதம்

**மேடம்**
சயன சுகக்குறைவு, சொத்துக்களால் நன்மை, பிரயாணம், காரிய அலைச்சல்

**இடபம்**
மனமகிழ்ச்சி, பொருள் சேர்க்கை, காரிய அனுகூலம், வாக்குப் பலிதம்

**மிதுனம்**
தொழில் அபிவிருத்தி, தூரதேசச் செய்தி, முயற்சி கைகூடும், பிறர் உதவி

**கடகம்**
கட்டுப்பாடு, புதியதொழில் சிந்தை, மனச்சஞ்சலம், பெண்கள் உதவி

**சிங்கம்**
எதிர்பாராத பிரச்சினை. உறவினர்மனஸ்தாபம், காரிய தாமதம், பிரயாணக்கஷ்டம்

**கன்னி**
சென்றஇடத்தில்செல்வாக்கு தனவரவு, நண்பர்கள் சந்திப்பு, சுவாரஸ்யம்

**துலாம்**
செய்தொழில்விருத்தி, காரியநன்மை, சுகவாழ்வு, அதிகாரம்

**விருச்சிகம்**
மனச்சஞ்சலம், காரியஇடையூறு, கௌரவக்குறைவு, தொழில் முன்னேற்றம்

**தனுசு**
கல்விச்சிறப்பு, தன்னம்பிக்கைக்குறைவு, குடும்பசுகம், முயற்சி தாமதம்

**மகரம்**
கூட்டுமுயற்சி, காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை, இனிய சம்பவம்

**கும்பம்**
மனக்குழப்பம், தனவிரயம், காரியஜெயம், தர்மம்

**மீனம்**
காரியநன்மை, புதியபொருள் சேர்க்கை, போசனசுகம், சயனசுகம்

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

# போக்குவரத்து - அபிவிருத்தி தொண்டர்களுக்கு
# தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவுறுத்தல் !

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் இயங்கும் போக்குவரத்துக் கண்காணிப்புத்தொண்டர்கள் மற்றும் அபிவிருத்தித் தொண்டர்களுக்கான அறிவுறுத்தல் அடங்கிய அறிக்கைஒன்று விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்டப்பிரிவினால் வெளியிடப்பட்டுள்ளது;

நேற்றுமுன்தினம் வலம்புரி பத்திரிகைக்கு அனுப்பி வைக்கப்பட்ட அவ்வறிவுறுத்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

இன்று தமிழர்களின் பாரம்பரிய பூமியான யாழ். குடாநாட்டை ஆக்கிரமித்து நிற்கும் ஸ்ரீலங்கா இராணுவமும் அதற்குத் துணை போய்க் கொண்டிருக்கும் ஈ.பி டி.பி. தேசவிரோதக் குழுவும், அவை மேற் கொண்டுவரும் நடவடிக்கைகளும் எமது மக்களின் வாழ்வினை பெரும் அபாயத்தினுள் தள்ளியுள்ளன.

எமது கலாசார பண்பாட்டு விழுமியங்களைச் சிதைத்து, எமது இனத்தின் இருப்பினையும் தனித்துவமான இன அடையாளங்களையும் இல்லாதொழித்து, காணாமற்போதல், பாலியல் வல்லுறவுகள், இரகசியமான படுகொலைகள் எனத் தொடரும் ஸ்ரீலங்கா அரச இராணுவ இயந்திரத்தின் இன அழிப்பு நடவடிக்கைகளில் ஈ.பி.டி.பி. தேசவிரோதக் குழு பெரும் பங்கினை ஆற்றிவருகின்றது.

இக்கொடுமைகள் ஒருபுறமிருக்க இன்று ஈ.பி.டி.பி. தேசவிரோதக் குழு, யாழ். மண்ணில் போக்குவரத்து பொலிஸ்படை, அபிவிருத்தித் தொண்டர்கள் என்ற பெயர்களில்பெரும்நாசகாரத் திட்டங்களை அரங்கேற்றி வருகின்றது; அபிவிருத்தி புனர்வாழ்வு வேலைவாய்ப்பு என்ற போர்வைகளில் அபிவிருத்தித் தொண்டர்கள், போக்குவரத்து பொலிஸ் படை போன்ற குழுக்களை அமைத்து அவர்களை மறைமுகமாகவும் நேரடியாகவும் தேசவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி வருகின்றது; இதனால், அற்ப சலுகைகளுக்காக ஆசைகாட்டி இவற்றில் இணைக்கப்பட்டுள்ள இளைஞர், யுவதிகளின் உயிர்வாழ்வு பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது.

இன்று ஈபிடிபியினரின் அபிவிருத்தித் தொண்டர்களும் போக்குவரத்து பொலிஸ் படையினரும அவர்களின் தேசவிரோத நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அங்கங்களாக மாறியுள்ளனர்; இத்தேச விரோத நடவடிக்கைகளுக்குத் துணை போவதன் மூலம் அவர்கள் தம்மைத் தாமே பெரும் உயிரழிவுக்கு இட்டுச் செல்கின்றனர். நாம் முன்பும் போக்குவரத்துப் பொலிஸ் படைதொடர்பாக எமது மக்களைக் கவனமாகவும் எச்சரிக்கையுடனும் இருக்குமாறு கேட்டுள்ளோம்.

இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலத்தில் தமிழ் தேசிய இராணுவத்தில் இணைக்கப்பட்ட அப்பாவி இளைஞர், யுவதிகளுக்கு ஏற்பட்ட பெரும் உயிரழிவினை இங்கு நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

அபிவிருத்தித் தொண்டர்கள் என்ற பெயரில் ஈ.பி டி.பி.யினர் அமைத்துள்ள குழுக்களில் இருப்பவர்கள் தேச விரோத நடவடிக்கைகளுக்குத் துணைபோபவர்களாகவே கருதப்படுவார்கள்; அற்ப சலுகைகளுக்குப் பணிந்து தேச விரோதிகளுக்குத் துணைபோகும் கூட்டத்தினர் என்றும் மன்னிக்கப்பட முடியாதவர்கள்

தமிழ் மக்கள் ஒன்றிணைந்து நின்று தமது சுதந்திர வேட்கையை வெளிப்படுத்த முயலும் இக் காலகட்டத்தில் இத் தேச விரோதிகளின் நலன்களை முன்னெடுக்க முயலும் எவரும் எம் மக்களுக்கு பெரும் துரோகமிழைத்தவர்களாகவே இருப்பார்கள். இவர்கள் வரலாற்றில் கறைபடிந்த அத்தியாயங்களாக இருக்கப் போவதுடன் கடுமையான பின்விளைவுகளையும் எதிர் கொள்வார்கள்.

எனவே, சிங்கள இராணுவத்தினதும் ஈ.பி.டி.பி. தேச விரோதிகளினதும் இந் நாசகாரத் திட்டங்களையிட்டு எமது மக்களை மிகுந்த எச்சரிக்கையுடனும் விழிப்புடனும் செயற்படுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம் என்று அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## மனித எலும்புகளால் வேலியிடப்பட்ட தோட்டத்திலே
# மீண்டும் பூ மலருமா?

இந்த மண் பட்டிருக்கின்ற வேதனை கொஞ்சம் நஞ்சம் அல்ல. கண்ணீரும், துன்பமும் ஒரு செந்நீரான கதையையே உருவாக்கியுள்ளது. அப்படியானால் நம்மை உண்டாக்கிய கடவுள் நம்மை காப்பாற்றத் தவறி விட்டாரா? அவர் என்ன அரசியல் வாதியா? யூதனா? இல்லை ஆங்கிலேயனா? அல்லது ஒரு மதத்திற்கு சொந்தமானவரா? அல்லது சூரியனையும் சந்திரனையும் பூமியையும் இயக்குபவரா? கடந்து விட்ட இலக்கியமா, கதையா, சரித்திர வரலாறா? எம்முடைய கண்ணீரை அவர் காண முடியாதபடி தம் உல்லாச பூமியிலே சுற்றித் திரிபவரா?.

தேவன் ஒரு மனிதனைத் தானே படைத்தார். அவனுக்குள் இருந்து தானே உலக ஜனம் விருத்தியடைந்தது. குலம், கோத்திரம், ஜாதிகள் என்பன உண்டானது. அந்த ஒரே மனிதனில் இருந்து தானே பலர் பிரிந்தார்கள். அப்படியானால் ஏன்? நமக்குள் ஜாதி. மத, பிரிவினை. நாம் ஒன்று கூடி அந்த ஆண்டவனைத் தேடுவோம்.

இந்த அராஜகக் கட்டிலே அல்லல்படும் நாம் மனித எலும்புகளினால் வேலி கட்டப்பட்ட இந்த யாழ் மண்ணிலே மீண்டும் ஒரு அழிவு வராமல் யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானத்தைதெய்வத்திடம் கேட்போம்! கடவுளைத் தேடுவோம்!!

வாருங்கள் உங்கள் வாழ்க்கையில் கண்ணீர், நோய், துன்பம், பிசாசின் பிடி இப்படியான எல்லாவிதமான பிரச்சினைகளிலிருந்தும் விடுதலை பெறலாம். ஒரு முறை கடவுளிடம் கையேந்திப் பார்ப்போம்!!

## தெய்வத்தின் திருப்பாதத்தில்
## இயேசு ஜீவிக்கிறார் சுவிசேஷ சுகமளிக்கும் கூட்டம்

செய்தி: சகோ. செ. இராஜேந்திரம் அவர்கள்

காலம், இடம்:

**2001 நவம்பர் மாதம் 27, 28 ஆம் திகதிகளில் பருத்தித்துறையிலும், நவம்பர் மாதம் 29 முதல் 2 ஆம்திகதி வரை துரையப்பா ஸ்ரேடியம் (உள்ளரங்கு) யாழ்ப்பாணத்திலும் பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை நடைபெறும்..**

**பிரவேசம் இலவசம் பிரவேசம் இலவசம்**

தொடர்பு: இயேசுஜீவிக்கிறார், 401, ஞுத்மாவத்தை வீதி, கொழும்பு-15
இயேசு ஜீவிக்கிறார், த. பெ. 1044, கொழும்பு. T.P. 522608

(4002)

### தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு

# ஐக்கியம் என்ற பெயரில் ஐ. தே. கவின் அடிவருடியாகச் செயற்படுகிறது : செந்திவேல் உரை

(யாழ்ப்பாணம்)

கடந்த ஐம்பத்து நான்கு ஆண்டுகளில் பாராளுமன்ற அரசியல் தளத்தில் ஆதிக்க அரசியலை வழிவழியாக தத்தமது கரங்களில்வைத்து வந்தவர்கள் தமிழ்க்கட்சிகள்.

ஆதிக்க அரசியலை மட்டுமன்றி வாரிசு அரசியலைத் தமிழ்மொழியின் பெயராலும் தமிழ் இனத்தின் பெயராலும் நடத்திவந்த இவர்கள் காலத்திற்குக் காலம் புதுப்புது வேடபணிந்து தேர்தலில் பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றும வந்துள்ளனர்.

இவ்வாறு நெல்லியடி கன்பொல்லையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய புதிய ஜனநாயகக் கட்சியின் முதன்மை வேட்பாளர் சி.கா. செந்திவேல் கூறினார்.

வெகுஜனஇயக்கப்போராளி ஆ. தங்கராசா தலைமையில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில் செந்திவேல் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இத்தகைய ஆதிக்க அரசியல் தலைமையைத் தோற்கடித்து அரசியல் அரங்கிலிருந்து அப்புறப்படுத்தும் ஒரு முயற்சியாகவே இத்தேர்தலில் போராட்டப் பாரம்பரியத்திலிருந்து வளர்ந்துவரும் புதிய ஜனநாயக கட்சி போட்டியிடுகின்றது.

எனவே பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் போராட்ட சக்தியாக உறுதியுடன் செயல்பட பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை மக்கள் வழங்குவார்கள் என்ற நம்பிக்கையுடனேயே இத்தேர்தலில் பங்கு கொள்கின்றோம்.

தமிழ் மக்கள் கடந்த கால அரசியலையும், சமகால யுத்த சூழலையும் உற்று நோக்க வேண்டும்.

ஒருபுறத்தில் பேரினவாத பொதுஜன முன்னணியிடம் கோடிக்கணக்கில் பணம்பெற்றுக் கொண்ட ஈ.பி.டி.பி. கட்சியினர் அபிவிருத்தி புனரமைப்பு என்ற பெயரில் எலும்புத் துண்டுகளாக பணத்தை அள்ளிவீசி வருகின்றனர்.

இது தமிழ்மக்களை கையேந்தவைத்து நவீன அடிமைகளாக்கும் முயற்சியும், தமிழ் இனத்தையே பேரினவாத யுத்த வெறியர்களுக்கு விலை பேசி விற்பதுமாகும்

மறுபுறத்திலே ஐக்கியம் என்ற பெயரில் தமிழர் கூட்டணி தலைமையில் நிற்கும் கட்சிகள் மற்றொரு பேரினவாதக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிக்கு கொண்டு வருவதிலேயே அக்கறை காட்டி நிற்கிறார்கள்.

மேட்டுக்குடி சிங்கள ஆளும் பேரினவாதிகளின் காலடியில் நிற்பதையே கடந்த 54 ஆண்டு கால பாராளுமன்ற அரசியலில் தமிழ்த் தலைமைகள் தமது நிலைப்பாடாகக் கைப்பிடித்து வந்துள்ளனர். அதன் தொடர்ச்சியையே எதிர்வரும் பொதுத் தேர்தல் மூலமும் செய்யப்போகிறார்கள்.

புலிகள் இயக்கத்தின் அங்கீகாரத்திற்காகவே தேர்தலில் நிற்பதாகக் கூறும் தமிழ்க் கட்சிகள் அண்மைக்காலம் வரை புலிகளை எதிர்த்தும், காட்டிக்கொடுத்தும் வந்தவர்கள் என்பதை மக்கள் நன்கு அறிவார்கள்.

புலிகள் ஏற்றுக்கொண்ட நோர்வேயின் மத்தியஸ்தத்தை வெளிப்படையாகவே எதிர்த்த இத்தமிழ்க் கட்சிகள் இந்தியா மத்தியஸ்தம் செய்ய வேண்டும் என வற்புறுத்தி வந்தவர்கள்.

ஆனால் இன்று தேர்தலின் வெற்றி ஒன்றுக்காக புலிகளைப் பற்றியும் நோர்வே பேச்சுவார்த்தை பற்றியும் ஏமாற்றுப் பேச்சுக்களை நிகழ்த்தி வருகின்றார்கள்.

இத்தகைய ஏமாற்று அரசியல் வேடங்களை மக்கள் புரிந்து கொண்டு உண்மையான போராட்ட அரசியலுக்கு வாக்களிக்க வேண்டும்.

புதிய வெகுஜன அரசியல் போராட்ட சக்தி ஒன்றினை உருவாக்க மக்கள் வாக்களிக்க வேண்டும். எமது புதிய ஜனநாயக கட்சி அதனைக் கோரியே இத்தேர்தலில் போட்டியிடுகின்றது. மக்கள் எமக்கு பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை வழங்கி அங்கீகாரம் தருவார்கள் என நம்புகின்றோம் என்று கூறினர்.

இக் கூட்டத்தில் வேட்பாளர்களான சட்டத்தரணி கோ. தேவராஜா, க. ஆனந்தகுமாரசுவாமி ஆகியோர் உட்பட வேறும்பலர் உரையாற்றினர் (உ)

## தேர்தல் வியூகம்

---

### பயங்கரவாத வன்முறைகளைப்

# பயன்படுத்தி வாக்குகளை கொள்ளையடிக்கிறது பொ.ஐ.ஐ.மு.

### ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

பயங்கரவாதத்தையும், வன்முறைகளையும் பயன்படுத்தி வாக்குகளைக் கொள்ளையடிப்பதைத் தவிர பொதுஜன ஐக்கிய முன்னணியினருக்கு வேறுமாற்றுவழி இல்லையென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பொ.ஐ.ஐ.மு. மீது குற்றஞ்சாட்டியுள்ளார்.

மாத்தறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்திலேயே ரணில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில். ஐக்கிய தேசியக்கட்சிக்கு கிடைத்துள்ள மக்களின் பேராதரவிற்கு முன்னால் பொதுஜன ஐக்கியமுன்னணியினால் எதனையும் சாதிக்க முடியாது என்றும்,

தற்போது நாடு மோசமான பொருளாதார நெருக்கடியினை எதிர்நோக்கியுள்ளது என்றும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். (செ-7)

---

### ஸ்ரீல.மு. காங்கிரஸ்

# ஐ. தே. கவுடன் இணைவதற்கு பணம் பெறவில்லை

### ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைவதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமும் அவரின் கட்சியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் 5பேரும் 30கோடி ரூபாவையும், மற்றும் வாகனங்களையும், பெற்றிருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்கட்சி மறுத்துள்ளது.

அக்கட்சிமீது சுமத்தப்பட்ட அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் தான் மறுப்பதாகவும் இவ்வாறான குற்றச்சாட்டுக்களைப் பரப்பிவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருக்கும் இவருக்கு ஆதரவாக ஒத்தாசை புரிந்த சகல அரச ஒலி, ஒளி ஊடகங்களுக்கும் எதிராக 30 கோடி ரூபா நட்டஈடு கோரிக் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் ஸ்ரீல. மு. கா. தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்வாறான பொய்க்குற்றச்சாட்டுக்களின் மூலம் ஐக்கிய தேசியக்கட்சியினதும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினதும் வெற்றியை முறியடிக்க முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ 7)

---

# ஜனநாயகத்தின் முகத்தில் இடித்து அதன் பற்களை கொட்டுகிறது அரசு

### ஜீ. எல். பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கொலை செய்த ஒருவரை கொலை செய்யுமுரிமை மக்களுக்குண்டு என்று ஜனாதிபதி சமாதானமையில் ஞாயிறன்று கூறியுள்ளார். அவ்வாறாயின் எமக்கு பொலிஸ் நிலையங்களும், நீதி மன்றங்களும் எதற்கு?

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனித நாகரிகம் தோற்றுவித்த சட்டங்கள் விதிகளால் என்ன பயன்? இவ்வாறுபேராசிரியர் ஜீ எல். பீரிஸ் செய்தியாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

ஐ. தே. க. ஆட்சியமைக்குமாயின் பாராளு மன்றப் ஒத்திவைக்கப்படுமென்றும், கலைக்கப்படுமென்றும் அனுரா பண்டார நாயக்கா கூறியிருப்பதும் திடுக்கிட வைக்கும் செய்திதான்,

அது ஜனநாயகமாக இருக்க முடியாது. ஜனநாயகத்தின் முகத்தில் இடித்து அதன் பற்களை கொட்டும் முயற்சியே ஜனாதிபதி தனக்கு விரும்பிய கட்சியை அரசாங்கம் அமைக்க அனுமதிப்பதாயின் தேர்தல் எதற்காக? இவ்வாறு ஜீ எல். பீரிஸ் மேலும் வினா எழுப்பினார். (உ)

---

# பிரதமரைக் கொல்வதற்கு ஐ.தே.க. புலிகளைப் பயன் படுத்துகின்றது

(கொழும்பு)

பிரதமமந்திரியைக்கொலை செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சியினர் விடுதலை புலிகளைப் பயன் படுத்தி வருகின்றனர் என்பதை எஸ் பி திசநாயக்காவின் கூற்றுக்கள் உண்மைப்படுத்துகின்றன என பொது ஜன ஐக்கியமுன்னணியின் தேர்தல் தொடர்பு சாதனைப் பிரிவு தெரிவித்துள்ளது.

பிரதமர் ரட்ண ஸ்ரீ விக்ரமநாயக்காவை கொலைசெய்ய ஜனாதிபதி முயன்று வருகின்றார் என்று திஸநாயக்கா தெரிவித்திருந்தார். ஆனால் ஐக்கிய தேசியக்கட்சியின் சதி முயற்சியை மூடி மறைக்க திஸநாயக்க எடுத்த முயற்சியே இது என ஊடகத் தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன. (செ-7)

---

### ஐக்கிய தேசியக் கட்சி

# ஆட்சி அமைக்குமாயின் ஜனாதிபதி சர்வாதிகாரியாக மாறுவார்

### புதிய இடதுசாரி முன்னணி எதிர்வு கூறுகிறது

(கொழும்பு)

"எதிர்வரும் டிசம்பர் 5-ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ஐ.தே.க. வெற்றி பெற்று, சிறுபான்மைக் கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைத்தால், அந்த அரசைக் கவிழ்ப்பதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சித்தாந்த சர்வாதிகாரியாக மாறும் வாய்ப்புகள் உருவாகும்".

இவ்வாறு புதிய இடதுசாரி முன்னணிக் கட்சியின் பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரட்ண விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்

அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

சிங்கள பௌத்த இனவாத அரசை அமைப்பதற்கு பொ.ஐ.மு.வும், ஜே வி. பி. யும் கூட்டுச் சேர்ந்து திட்டம் தீட்டுகின்றது

ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறுவதைத் தடுப்பதற்காக அவர்களுக்கெதிராக மோசமான பிரசாரங்களில் ஈடுபடுவதுடன் சிங்கள இன வாதத்தைதூண்டும் நடவடிக்கைகளிலும இவ்விரு கட்சிகளும் ஈடுபட்டுள்ளன.

என அவர் மேலும்தெரிவித்துள்ளார் (செ)

---

# வரணியில் வாக்குச் சாவடி

(கொழும்பு)

தென்மராட்சிப் பகுதியில் மீளக்குடியேறியுள்ள மக்களின் நன்மை கருதிவரணியில் வாக்குச்சாவடி ஒன்று அமைக்கப்படவுள்ளது என யாழ்தெரிவத்தாட்சிஉத்தியோகத்தரும் அரச அதிபருமான க சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் தொடர்பானதெரிவத்தாட்சி அதிகாரிகளின் கூட்டமொன்றிலேயே வரணியில் வாக்குச் சாவடி அமைப்பதென தீர்மானிக்கப்பட்டது

தென்மராட்சியில் வாக்குச் சாவடி ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தி யாழ். தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்ததுடன்தேர்தல் ஆணையாளருக்கும் கடிதம் அனுப்பி வைத்திருந்தமை தெரிந்ததே. (வ)

---

# துப்பாக்கி முனையில் வாக்காளர்அட்டை அபேஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதம தபால் ஊழியரை மிரட்டி ஈச்சமோட்டைப் பகுதியில்வைத்துவாக்காளர்அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் ஈச்சமோட்டைப் பகுதியில் வாக்காளர்அட்டைகளைவிநியோகம் செய்து கொண்டிருந்த சமயம் இனம் தெரியாத நபர் ஒருவர் தபால் ஊழியரிடம் இருந்துவாக்காளர் அட்டைகளைப் பறிக்க முற்பட்டதாகவும் அச்சமயம் அதை தடுக்கமுனைந்த ஊழியரை துப்பாக்கியைக் காட்டி மிரட்டி 104 வாக்காளர்அட்டைகளை பறித்து சென்றதாகவும் தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் இவ்வாறான வாக்காளர்அட்டைகள் பறிப்புசம்பவம் நேற்றுமுன்தினம் வரையில் மூன்று இடம்பெற்றுள்ளதாகவும் அவை தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-104)

# 'வக்பூம்' கொள்வனவு தமிழர்களை அழிக்கும் திட்டம் கூட்டமைப்பு கண்டனம்

(கொழும்பு)

பிரிட்டனிடம் இருந்துபயங்கர 'வக்பூம்' குண்டுகளை சட்டவிரோதமாக இலங்கை அரசு கொள்வனவு செய்துள்ளமையைத் தமிழ்க் கட்சிகளின்கூட்டமைப்புவன்மையாகக் கண்டித்துள்ளது.

தமிழ் மக்களைக் கொன்றொழிப்பதற்குப், தமிழ் மக்கள் மீதான கொடிய யுத்தத்தைத் தொடங்கவுமே இத்தகைய பயங்கர எரிவாயுக் குண்டுகளை இலங்கை அரசு கொள்வனவு செய்துள்ளது.

பயங்கரம் விளைவிக்கத்தக்க மேற்படி ஆயுதங்களை இலங்கை அரசு கொள்வனவு செய்தமை தமிழ்மக்கள் மத்தியில் பெரிய அச்சத்தை இப்போது ஏற்படுத்தியுள்ளது.

அரசின் இந்த நடவடிக்கை தமிழ் மக்களைப் பூண்டோடு அழிக்கும் திட்டமாகும் அரசு தொடர்ந்தும் யுத்தத்திலே அக்கறை காட்டி வருகிறது. சமாதானம் இந்தஅரசிடம் வெகு தூரத்திலே உள்ளது.

இவ்வாறுதமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் என்.குமரகுருபரன், ஆர். யோகராஜன், மனோ கணேசன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் தமது கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர். (எ-வ)

## காணாமல் போனோர்பற்றி 32 முறைப்பாடு

(வவுனியா)

வவுனியாவில் இம் மாதத்தில் மாத்திரம் கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் காணாமல் போனவர்கள் பற்றிய 32 முறைப்பாடுகள் உறவினர்களால் செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் எஸ். ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இவர்களில் 6 பேர் காணாமல்போயுள்ளதாகவும் இதில் இருவர் பெண்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-4)

## எமது இதய பூர்வமான நன்றிகளும் பாராட்டுக்களும்

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர்
ஆலய பரிபாலனசபை



சங்கிலி மன்னனால் ஸ்தாபிக்கப்பட்டு பூசிக்கப்பட்ட பழம் பெரும் புராதன ஆலயமாகிய எமது ஆலய புனரமைப்புக்கென முதற்கட்டமாக ரூபா 10,00000 (பத்துலட்சத்தை) ஒதுக்கி அதில் 500,000/-ஐ எமக்குத் தந்துதவிய வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்குக் கிழக்கு தமிழ்மொழிவிவகாரங்கள் அமுலாக்கல் அமைச்சரும் இந்துக்கலாசார அமைச்சருமான,

மாண்புமிகு
**கே. என். டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் பிரதம அமைப்பாளருமாகிய
உயர்திரு.
**K. V. குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களுக்கும்

எமது நல்லூர் பிரதேசசபைத் தலைவரும் யாழ் மாவட்ட பாராளுமன்ற வேட்பாளருமான
உயர்திரு.
**க. மணிபல்லவராஜன் (நிசாந்தன்)**
அவர்களுக்கும்

எமது மனப்பூர்வமான நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றோம்.

**நல்லூர் ஸ்ரீசட்டநாதர் ஆலய பரிபாலன சபையினர்,**
**நல்லூர் ஸ்ரீசட்டநாதர் ஆலய இந்துஇளைஞர் மன்றத்தினர்,**
**நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயவழிபடுவோர்சங்கத்தினர்.**

(4003)

## விபத்தில் காயம்

(மந்திகை)

பொலிஸாரின் மோட்டார் சைக்கிள்-சைக்கிள் விபத்துக்குள்ளானதில்இருபொலிஸார் உட்படநால்வர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை கரவெட்டி மூத்த விநாயகர்கோவிலடியில்இடம் பெற்றது.

இச்சம்பவத்தில் காயமடைந்த தென்னக்கோன் (வயது-38) நிமால்சாந்த (வயது-28) கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த க.அருள்ராஜ் (வயது-18) க.ஜெயானந்தன் (வயது-18) ஆகியோர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

★ ★ ★

(மந்திகை)

தட்டிவான் -சைக்கிள்விபத்துக்குஉள்ளாகியதில்இளைஞர் ஒருவர் மயக்கமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நெல்லியடிப் பகுதியில் நடைபெற்ற இச்சம்பவத்தில்துன்னாலைவாய்க்கால் தெருவைச்சேர்ந்தசந்திரன்ஜெயச்சந்திரன் (வயது-26) என்பவரே படுகாயம்அடைந்துமயக்க நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை இரவு வெளிச்சமின்றிவந்தஇரு சைக்கிள்கள் நாவலர் மடத்தடியில் விபத்துக்கு உள்ளானதில் கிரிப்புலி முகாமைச் சேர்ந்த எஸ்.விக்கினேஸ்வரன் (வயது-36)என்றகுடும்பஸ்தர் ஒருஎவரும் மயக்கமடைந்த நிலையில்வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார். (செ-23)

## வதிவிடவசதி

(பருத்தித்துறை)

தும்பளையில் தற்காலிகமாக இயங்கிவரும் வடமராட்சிகிழக்கு பிரதேசசெயலகம், முதல் கட்ட நடவடிக்கையாக நாகர் கோவிலில் இருந்து இடம் பெயர்ந்து குடத்தனையில் வாழும் 15 குடும்பங்களுக்கு தற்காலிக வதிவிட வசதி செய்துகொடுத்துள்ளது.

குடத்தனை பொற்பதி பகுதியில் இடம் பெயர்ந்து வாழ்பவர்களுக்கும் இவ்வசதியினைச் செய்துகொடுக்கவுள்ளதாக மேற்படி செயலகம் தெரிவித்துள்ளது. (எ-245)

## மத்தியஸ்தருக்கு வகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் மத்தியஸ்தர் குழுவினால் நடத்தப்படும் மத்தியஸ்தர்களுக்கான வகுப்புக்கள் நேற்று தொடக்கம் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும்யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் மு.ப10 00மணிக்கு நடைபெறும் என்று மேற்படி சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். (எ)

# மக்கள்ஆணைபெற்ற கட்சி அலுவலகம் ஆயுதக்குழு முகாமல்ல ஈ. பி. டி. பி. விளக்கம்

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாகும்: குடாநாட்டில் பத்து பிரதேச சபைகளை மக்கள் வழங்கிய ஆணையுடன் நிர்வகித்து வரும் கட்சி. எனவே எமது அலுவலகங்களை ஆயுதக் குழுக்களின் முகாம் என்று கூறுவது பொருத்தமானது அல்ல.

இவ்வாறு ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

எமது ஆயுதங்கள் தற்பாதுகாப்பிற்கானவை. என்பதும் மக்களின் ஜனநாயக உரிமைகளை நிலைநிறுத்துவதற்கானவை என்பதும் மக்கள் நன்கறிந்த விடயமாகும்: எங்கள் தோழர்கள் ஆயுதங்களைக் காட்டி வரியோ, கப்பமோ அறவிட்டதில்லை. அவற்றுக்குப் பயன்படுத்தப் போவதுமில்லை.

மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த வேண்டும், சுபீட்சமான ஓர் எதிர்காலம் மக்களுக்குக் கிட்ட வேண்டும் என்பதற்காகவே அர்ப்பணிப்பு உணர்வுடன் அரசியல் பொதுவாழ்வில் காலடி எடுத்து வைத்தோம்: மக்களை மிரட்டி அச்சுறுத்தும் அவசியம் எதுவும் எமக்கு இல்லை. என்று மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# நடைபெறவுள்ளதேர்தலில் சத்தியமே ஜெயிக்கும் திருமதி பேரியல் அஷ்ரப்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்மை எல்லாம் ஓரம் கட்டி விட்டு நிந்தாவூரில் 3 நாடாளுமன்றஆசனங்களைப் பெறுவோம் எனமனப்பால் குடித்துக் கொண்டிருக்கின்றது, ஆனால் எதிர்வரும் பொதுத் தேர்தலில் சத்தியம் ஜெயிக்கும்.

இவ்வாறு பொதுஜன ஐக்கியமுன்னணியின்திகாமடுல்ல மாவட்ட முதன்மை வேட்பாளர் திருமதி பேரியல் அஷ்ரப் நேற்று முன் தினம்நிந்தாவூரில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்உரையாற்றிய போது குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

நாம் முஸ்லிம்கள் என்று கோசம் எழுப்பிக் கொண்டிருப்பதால் எதுவும் நடந்து விடப் போவதில்லை. ஏனைய சமூகங்களுடன்ஒன்றிணைந்து செயற்படுவதால் மாத்திரமே எமது அபிவிருத்தி நடவடிக்கைகளை தொடர்ந்து செய்ய முடியும் என்றும்அவர்மேலும் தெரிவித்துள்ளார். (செ-7)

# ஐ.தே.க. அலுவலகம் மீது கைக்குண்டுத் தாக்குதல் ஏறாவூரில் சம்பவம்

[மட்டக்களப்பு]

ஏறாவூர் மீராகேணியில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகம் மீது இடம் பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் மூன்று பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அலுவலகம் முற்றாகச் சேதத்திற்குள்ளாகியுள்ளதுடன், கட்சியின் ஆவணங்கள் மற்றும் கருவிகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது:

ஜீப்பொன்றில் வந்த மாற்றுக் கட்சியின் உறுப்பினர்களே கைக்குண்டை வீசிவிட்டுச் சென்றுள்ளதாக ஐ.தே. கட்சியின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை, புத்தளத்தில் உள்ள மக்கள்புரம், மற்றும் தில்லையடி, கல்லடி ஆகிய இடங்களில் உள்ள ஐ.தே: கட்சியின் தேர்தல் அலுவலகங்களும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (செ-7)

# இராணுவ மோட்டார் சைக்கிள் விபத்தில் மாணவியர் மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ மோட்டார் சைக்கிள் விபத்தின் போது காயமடைந்த மாணவிகள் மூவர் யாழ் போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்நகரப் பகுதியில்நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவத்தின் போது யாழ். சென். ஜேம்ஸ் பாடசாலை மாணவிகளான வின்சன்ஜெயக்குமாரி மேரிமரீனா (வயது 16 குருநகர்) இரத்தினம் ஜெனகா (வயது 15 புன்னாலைக்கட்டுவன் வடக்கு) சூசைதாசன் ரோசிபாமினி (வயது 14 குருநகர்) ஆகிய மூவருமே காயமடைந்தவர்களாவர். [உ-10]




பொதுத் தேர்தல்-2001
தமிழேமூச்சு-சேவையே வாழ்வுஎங்கள்கூட்டுறவாளன்
திரு. சி. சிவமகாராசா அவர்களுக்கே எம் வாக்கு



(C-2921)
தமிழர் விடுதலைக் கூட்டணி

## இன்று ஒரு தகவல்

# கர்வம் நீங்கிய கதை

'என்னை விட்டா வேறே யாரும் இந்தக் காரியத்தைச் செய்ய முடியாது' என்று சொல்லிக் கொலரைத் தூக்கி விட்டுக் கொள்கிறவர்கள் இந்த உலகத்தில் நிறையப் பேர் உண்டு. கர்வம் என்கிறது. அப்படியோ வந்து நம் தலைக்குள்ள குந்திக்கொள்கிறது அதைக் கீழே இறக்கி வைக்கிறது மிகவும் கஷ்டமாயிருக்கிறது ஆஞ்சநேயரையே இந்தக் கர்வம் விட்டுவைக்கவில்லையாம் என்று ஆனந்த இராமாயணம் சொல்லுகிறது.

அவர் சீதையைத் தேடிக் கண்டுபிடிக்கிறதற்காகப் போனாரல்லவா? அசோகவனத்தில் சீதையைப்பார்த்து விட்டுத் திரும்பிவந்துகொண்டிருக்கிறார். அந்தச் சமயத்தில் வந்தது அவருக்கு கர்வம் தான். செய்திருக்கிற செயல்களையெல்லாம் நினைத்துப் பார்த்தார். 'அடடா! எப்பேர்ப்பட்ட காரியமெல்லாம் நான் செய்திருக்கிறேன். சமுத்திரத்தையே தாண்டினேன். சீதாபிராட்டியைத் தேடிக்கண்டு பிடித்தேன். இராவணனையே கண்டுபேசினேன். அங்கே நெருப்பு வைத்து அரக்கர்களையெல்லாம் கதிகலங்க அடித்தேன். இப்படியெல்லாம் தன்னைப் பற்றிப் பெருமையாகநினைத்தார் ஆஞ்சநேயர். உடனே அவருடைய உள்ளத்திலே கர்வம் தோன்ற ஆரம்பித்து விட்டது. இதைப் பகவான் புரிந்து கொண்டார்.

ஆனால் ஆஞ்சநேயர் மிகவும் பெருமையாகச் சிரித்துக் கொண்டே பலத்தகர்ச்ஜனையோடு வந்து கொண்டிருக்கிறார். வழியில் திடீரென்று அவருக்குத் தாகம் எடுத்தது. உடனே தண்ணீர் குடிக்க வேண்டும் போலிருந்தது. என்ன செய்யலாம் என்று யோசித்தார். அவர் நின்று கொண்டிருந்த இடம் மகேந்திரமலை சுற்றிலும் பார்த்தார். தண்ணீர் இருக்கிற இடம் எதுவும் தட்டுப்படவில்லை. கொஞ்சத்தூரத்தில் ஒரு முனிவர் உட்கார்ந்திருக்கிறது தெரிந்தது. மிகவும் அமைதியாக அவர் உட்கார்ந்திருந்தார். ஆஞ்சநேயர் அவரிடம் போனார்; முனிவரே! நான் இராமபிரானுக்காகச் சீதையைத் தேடிக்கண்டு பிடித்து விட்டுத் திரும்பிவந்து கொண்டிருக்கிறேன். மிகவும் தாகமாக இருக்கிறது, தண்ணீர் இருந்தால் கொடுங்கள். இல்லையென்றால் அது இருக்கிற இடத்தைக் காட்டுங்கள். நான் போய்க் குடிக்கிறேன். என்றார். முனிவர் தண்ணீர் இருக்கிற திசையைச் சுட்டிக் காட்டினார்.

ஆஞ்சநேயர் அங்கே புறப்பட்டார். போவதற்கு முன்னர் சீதைஅவரிடம் கொடுத்த சூடாமணி, ராமனின் முத்திரை மோதிரம், பிரமதேவன் கொடுத்த ஒரு கடிதம் ஆகிய மூன்றையும முனிவர் முன்னால் வைத்துவிட்டு தண்ணீர் குடிக்கிறதற்காகப்போனார். கொஞ்சநேரத்தில்இன்னொரு குரங்கு அந்தப்பக்கமாக வந்தது. முனிவரின் முன்னாலிருந்த சூடாமணி. மோதிரம், கடிதம் எல்லாவற்றையும் எடுத்து முனிவருக்குப் பக்கத்திலிருந்த கமண்டலத்திற்குள் போட்டு விட்டுப் போய் விட்டது. முனிவர் அதையும் புன்னகையோடு பார்த்துக் கொண்டு தான் இருந்தார்.

ஆஞ்சநேயர் தண்ணீர் குடித்து விட்டுத் திரும்பி வந்தார். முனிவருக்கு முன்னால் வைத்து விட்டுப்போனவை எதுவும் அங்கே இல்லை. பயந்து விட்டார். முனிவரைக் கேட்டார். அவர் கமண்டலத்துப் பக்கம் கண்ணைக் காட்டினார் இவர் உடனே ஓடிப் போய்அதற்குள்எட்டிப்பார்த்தார். உள்ளே பார்த்தால் இவருக்கு ஒரே ஆச்சரியம் இவர்வைத்துவிட்டுப்போனது மாதிரி ஆயிரக்கணக்கான முத்திரை மோதிரங்கள்கமண்டலத்துக்குள் கிடந்தன. அனுமார் குழம்பிப்போய் முனிவரைப் பார்த்தார். சுவாமி இவ்வளவு கிடக்கிறதே இதில் நான் விட்டு விட்டுப்போன மோதிரம் எது?' என்று கேட்டார் முனிவர் மிகவும் நிதானமாக குழந்தாய்! இராமாவதாரம் நடக்கிற காலங்களிலெல்லாம் சீதையை இராவணன் கவர்ந்து செல்வதும் அதன்பின் அனுமார் சீதையைக்கண்டு விட்டு திரும்புகிற போதுமுத்திரைமோதிரத்தை என் கமண்டலத்துக்குள்ளே போடுவதும் வழக்கம். அப்படிப் போடப்பட்ட மோதிரங்களைத் தான் இப்போது நீ இந்தக்கமண்டலத்துக்குள் பார்க்கிறாய் என்றார். இதைக் கேட்டவுடன் ஆஞ்சநேயருக்கு இருந்த காவம் ஓடிப் போய்விட்டது. வெட்கத்தோடு முனிவரைப்பார்த்தார்.

'சுவாமி அப்படியென்றால் இதுவரையும் எத்தனை இராமர்கள் தோன்றியிருக்கிறார்கள?' என்றுகேட்டார் கமண்டலத்தில் உள்ளமோதிரங்கள் எத்தனை என்று கணக்குப் போடுவது முடியாத காரியம் என்றார் முனிவர். ஆஞ்சநேயர் யோசித்தார். என்னைப் போல் எத்தனையோ பேர் இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள். அவர்களை விடப் பெரிதாக நான் அப்படியென்ன செய்து விட்டேன்' என்று நினைத்தார். அப்புறம் அங்கதன் இருக்கிற இடத்துக்குப் போனார். அவனுடன் சேர்ந்து இராமபிரானிடம் போனார். வணங்கினார் கண்கலங்கினார். ஆச்சிரமத்தில் நடந்ததையெல்லாம் சொன்னார். எல்லாவற்றையும் கேட்டபின்இராமபிரான் சிரித்துக் கொண்டே' முனிவர் உருவத்தில் வந்து நான் தான் உன்நன்மைக்காக இந்த வேடிக்கையைச் செய்தேன் கவலைப்படாதே! இதோ பார் என்றார்.

முனிவர் ஆச்சிரமத்தில் விட்டு விட்டு வந்த மோதிரம் இராமர் கையில் ஒளிவீசிக் கொண்டிருந்தது, ஆஞ்சநேயர் அப்படியே தரையில் விழுந்து வணங்கினார். அதன் பின எந்த நிலையிலும் அவர் உள்ளத்திலே கர்வம வரவேயில்லையாம். எந்தச் சமயத்திலும் மனத்தில கர்வத்துக்கு இடங்கொடுக்கக் கூடாது என்பதை வலியுறுத்தவே இந்தக் கதை.

அனுமார் கர்வப்பட்ட மாதிரி நமது ஆள் ஒருவர் கர்வப்பட்டார். ''அனுமார் அவ்வளவு கஷ்டப்பட்டு சீதை இருக்கிற இடத்தைக் கண்டு பிடித்தார். நான் அதைவிட அதிகமாக கஷ்டப்பட்டு என்னுடைய மோதிரம் இருக்கிற இடத்தைக் கண்டு பிடித்தேன்.'' என்றார். எபபடி சார் என்றேன் ''அடகுக் கடையில் அதைக் கண்டு பிடித்தேன் சார். என் சமசாரம் தான் அங்கே வைத்திருக்கிறாள். நான் இன்றைக்குத் தான் அதை மீட்டுக் கொண்டு வருகின்றேன், இனிமேல் ஒரு மாதத்திறகு எனக்குக் கர்வமே வராது என்றார். ''அது எப்படி?'' என்றேன். இந்த மாதச் சம்பளம் முழுவதும் அடகுக் கடையிலே கொடுத்துத் தானே மீட்டிருக்கிறேன். கையிலே பணம் இல்லை. கர்வம் எப்படி வரும் என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மாணவர்களது

# கல்வியுடன் ஒழுக்கத்தையும் ஆசிரியர்கள் வளர்க்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

''மாணாக்கரது கல்வி வளர்ச்சியில் மட்டுமன்றி அவர்களது நல்லொழுக்கத்திலும் நற்பண்புகளிலும் அன்றுபோல் இன்றும் ஆசிரியர்கள அக்கறை காட்டி அவர்கள் பின்பற்றுமபடியாக முன் உதாரணமாகத் திகழ வேண்டும்'';

ஸ்கந்தவரோதயாக்கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்ற போது சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வைத்திய கலாநிதி ஜெ.மகாதேவன் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது,

அன்பும் அறனும் உடைத்தாக வையததில் வாழ்வாங்கு வாழ நற்கல்வி எமக்கு உறுதுணை புரிகிறது. கல்வி ஒருவருடைய ஆளுமைப் பண்புகளை பல கோணங்களில் வளர்க்கிறது;

மாணவர் சாந்த சொரூபியாகவும் இன்சொலராகவும் பெற்றோர், ஆசிரியர், பெரியோரை மதித்தொழுகும் பண்பினராயும மிளிரவேண்டும். இறைபக்தி நிறைந்தோராய் வாழ வேண்டும்.

வீடியோ, சினிமா மாயைகளில அவமே காலத்தைப் போக்காதும் புகைத்தல், மதுபானம் அருந்துதல், போதைப் பழக்கம் போன்ற தீய பழக்கங்கட்கு உட்படாதும் மாணாக்கர் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

ஆங்கிலம் உலகத் தொடர்பு மொழியாகிவிட்ட இக்கால கட்டத்தில் ஆங்கில அறிவை வளர்த்தெடுப்பதற்கான களம் கல்லூரிகளில் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும்.

மொழி ஆற்றல் ஆங்கிலத்தில் மட்டுமன்றி தமிழிலும் பெரிதும் வளர்க்கப்பட வேண்டும். பேச்சும், விவாதமும், நுண்கலைகளும், நாட்டியமும் நாடகமும் தன்னம்பிக்கையையும் தலைமைத்துவப் பண்புகளையும் பெரிதும் வளர்க்கும்.

கல்லூரிக்கல்வி, சர்வ கலாசாலைக்கல்வி எனக்கற்ற பின் தொழில் கிடைக்கவில்லை என ஏமாற்றம் கொள்ள வேண்டியதில்லை. எத்தனையோ பதவி நிலைகள் தொழில் வாய்ப்புக்கள் தகுதத ஆளணியினர் இன்றி குறிப்பாக வடக்கு கிழக்கில் இருக்கின்றன என அவர் மேலும் கூறினார்.

(செ-106)

## இரவுச் சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டைப் பகுதியில் இராணுவத்தினர் கடந்த வெள்ளி வீடு வீடாகச் சென்று தீவிர சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

(ம-108)

## பொலிஸ் அதிகாரி பலி

(வவுனியா)

வவுனியா பறையனாலங்குளப்பகுதியில் அமைந்துள்ள பொலிஸ் காவலரண்மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதில் பொலிஸ் அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெறற இத்தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதி தீவிர தேடுதலுக்குள்ளாக்கபபட்டது.

(உ-7)

## கலந்துரையாடல்

(ஆனைக்கோட்டை)

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் ஏற்பாட்டில் சாவல்கட்டு சிறுவர் நிலையததில், ஊனமுற்ற சிறுவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் இடம் பெற்றது.

(உ-201)

## பாபா தினத்தில் மாணவருக்கு உதவி

(தென்மராட்சி)

பகவான் ஸ்ரீசத்திய சாயி பாபாவின் 76வது அவதார விழாவைமுன்னிட்டு திருநெல்வேலி பாபா சேவை நிலையம் 200 பாடசாலை மாணவர்களுக்கு கல்வி உபகரணம் அன்பளிப்பாக வழங்கியது.

அத்துடன் கண்பார்வை குறைந்த ஒருபெண்மணிக்கு மூக்குக் கண்ணாடியும் யாழ். பல்கலைக்கழகமாணவனுக்கு கல்வி உபகார நிதியும் வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும.

(எ-77)

## செஞ்சிலுவைப் பிரதிநிதிகள் பார்வையிட்டனர்

(கொழும்பு)

மட்டக்களப்பு ஏறாவூரில் கடந்த வியாழக்கிழமைப்படையினரின் எறிகணைத் தாக்குதலுக்கு உள்ளான இடங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதிகள் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இதேவேளை மேற்படி சம்பவத்தில கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 6 ஆக உயர்ந்துள்ளது.

(உ-5)

## சிற்பநிலைய அடிக்கல் நாட்டல்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் சட்டநாதர் கோவில சூழலில் மந்திரிமனை அமைந்துள்ள அரச காணிப்பகுதியில் சிற்ப ஓவியத்துடன் கூடிய பயிற்சிநிலையம அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது.

யாழ்.மேலதிக அரசஅதிபர் து வைத்திலிங்கமும நல்லூர் பிரதேச சபைத தலைவர் மணிபல்லவராஜனும் அடிக்கல்லை நட்டி வைத்தனர்.

[உ-10]

## சிவயோகம்

# அன்னையர் குடியிருப்பில் விதவைகளுக்கு வீடுகள்

(யாழ்ப்பாணம்)

லண்டன் சிவயோகம நிலையத்தின் நிதி உதவியில் கந்தரோடைக் கிராமத்தில் 'சிவயோகம் அன்னையர் குடியிருப்பு' என்ற பெயரில் ஐந்து புதிய இல்லங்கள் அமைக்கப்பட்டு வருகிறது.

இப்பகுதியில் கணவனை இழந்து ஆதரவற்றிருக்கும் விதவைப் பெண்களுக்கு எதிர் வரும் ஜனவரிமாதம இவ்வீடுகள வழங்கப்பட இருககின்றன.

ஒவ்வொரு வீடும் சுமார் மூன்றரை இலட்சம் ரூபா செலவில் சுமாரான வசதிகளுடன் கட்டப்பட்டு வருகின்றன. இந்துசமய நிறுவனங்கள ஆதரவற்றவர்களுக்கு உதவவேண்டும் என்ற குறிக்கோளுடன் சிவயோகம் நிறுவனம இத்திட்டத்தை முன்னெடுத்துள்ளதாகவும், விண்ணப்பங்கள கோரப்பட்டு தகுதியானவர்கள சமயசமூக அமைப்பின் பிரதிநிதிகள் கொண்ட குழுவினால் தெரிவு செய்யப்பட இருப்பதாகவும் இணைப்பாளர் ஆறு திருமுருகன் தெரிவித்தார்.

சிவயோகம் அன்னையர் குடியிருப்பை துர்க்காதுரந்தரி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி திறந்துவைத்து விதவைப்பெண்களான குடியிருப்பாளர்களிடம் கையளிக்கவுள்ளார்.

(செ-106)

# ஆசிரியர் பற்றாக்குறை அதிகாரிகளுக்கு மகஜர்

(மானிப்பாய்)

கட்டுடை சைவ வித்தியாசாலையில் ஆசிரியர்கள் பற்றாக்குறை காரணமாகமாணவர்களின் கல்வித்தரம குன்றி வருவதாக பாடசாலை அபிவிருத்திச் சங்கம்சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மகஜரினை அனுப்பியுள்ளது.

தரம்1முதல்தரம்5வரையே இப்பாடசாலையில் வகுப்புகள் உள்ளன. ஆனால் தறபோது இரு நிரந்தர ஆசிரியர்கள் மாத்திரமே உள்ளனர். தரம்1, தரம்4, தரம்5 ஆகிய வகுப்புகளுக்கு ஆசிரியர்கள் இல்லை. இதன் காரணமாக கடந்த வருடமும் இவ் வருடமும் தரம்5மாணவர்கள் புலமைப் பரீட்சையில் சித்தியடைய இயலாது போய் விட்டதுஎன்று அம்மகஜரில் சுட்டிககாட்டப்பட்டுள்ளது.

மேறபடி மகஜர் சண்டிலிப்பாய் கோட்ட கல்விப் பணிப்பாளர், வடக்கு-கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(எ-120)

## சிந்தனைக்கு விருந்து

### தந்தை நாணித் தலைகுனிந்தார்

தற்பிள்ளைக் கென்று சலுகைபல பெற்றவனைக்
கொம்பில் இருந்தக் குறிவைந்தார் வெம்பியவன்
வீணனாய் வீழஇவர் வேதனையி லாழ்ந்துமிக
நாணித் தலை குனிந்தார்.

'பழையவன்'

### பயங்கரவாதத்திற்கு எதிராக

# இந்தியாவுடன் இணைந்து போராட ஐரோப்பிய யூனியன் இணக்கம்

(புதுடில்லி)

இந்தியாவும் ஐரோப்பிய யூனியனும் சர்வதேச பயங்கரவாதத்தை எதிர்த்து ஒருங்கிணைந்து போராட இணங்கியிருக்கின்றன.

இதற்கான அலுவல் பட்டியலை இரு தரப்பும் கடந்த இரு தினங்களில் தயாரிக்கின்றன.

ஐரோப்பிய ஒன்றியமும் இந்தியாவும் புதுடில்லியில் நடத்திய பேச்சு வார்த்தைகளின் போது வாணிபத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது அறிவியல் தொழில் நுட்பம் மற்றும் துறைகளில் ஒத்துழைப்பைப் பெருக்குவது இந்தியாவின் தொடக்கக் கல்விக்கு பெருந்தொகைப்பணம் ஒதுக்குவது என்பவற்றில் இணக்கம் காணப்பட்டுள்ளன

இந்த உயர் நிலை சந்திப்பிற்கு இந்தியப் பிரதமர் வாஜ்பாயும் ஐரோப்பிய ஒன்றியத்தலைவரும் தலைமை தாங்கினார்கள். [து]

## வாஜ்பாய் முஷாரப் பேச்சு பாகிஸ்தான் அறிவிப்பு

(இஸ்லாமபாத்)

காட்மண்டில் நடைபெறும் சார்க் மாநாட்டில் கலந்து கொள்ளும் இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் அதிபர் ஜெனரல் முஷாரப் பேச இருப்பதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

இதனை இஸ்லாமபாத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்த பாகிஸ்தானின் செய்தித்துறைச் செயலர் அன்வர் முகமட் இந்தச் சந்திப்பை ஒரு ஆக்கபூர்வமான நடவடிக்கையென்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இந்திய பாகிஸ்தான் பேச்சுவார்த்தைகள் தொடர வேண்டும் என்றார்.

இதே வேளை புதுடில்லியில் இது பற்றி இந்தியப் பிரதமர் வாஜ்பாய் கருத்துத் தெரிவிக்கையில் அப்படியொரு பேச்சுக்குரிய சூழல் ஏற்படுமாயின் அதனைத் தவிர்க்க முடியாதென்று தெரிவித்தார். (து)

## பயணிகள் ரயில் விபத்து 14 பேர் ஸ்தலத்தில் பலி

(சண்டிகர்)

பீஹாரில் பயணிகள் ரயில், எஞ்சின் ஒன்றுடன் மோதியதில் 14 பயணிகள் இறந்துள்ளனர். 20க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

ரயில்வே அமைச்சர்நிதீஸ் குமார் சம்பவம் நடந்தஇடத்திற்கு விரைந்துள்ளார்.

அண்மையில் இடம் பெற்ற இந்த ரயில் விபத்தில் உயிரிழந்த குடும்பங்களுக்கு ஆழ்ந்த துக்கத்தைத் தெரிவித்த முதலமைச்சர் ராப்ரிதேவி போதுமான அளவுநட்டஈடுகொடுக்கப் போவதாக அறிவித்துள்ளார். [து]

# விளையாட்டு செய்திகள்

## சிம்பாவே அணி வெற்றி

(டாக்கா)

சிம்பாவே அணிக்கும் பங்களாதேஷ் அணிக்குமிடையே கடந்த வெள்ளிக்கிழமை சிட்டஹொங்கில் நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் சிம்பாவே அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 48.4ஓவரில்சகல விக்கெட்டுக்களையும் இழந்து156ஓட்டங்களைப் பெற்றது

பங்களாதேஷ் அணிசார்பாக கபிபுல் பசார்44ஓட்டங்களையும் காலித் மசூத40ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலிற்குத் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி42 2 ஓவரில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 161ஓட்டங்களைப் பெற்றது. சிம்பாவே அணிசார்பாக கிரைட்நிசாதி 79ஓட்டங்களைப் பெற்றார்.

சிம்பாவே அணி தொடர்ச்சியாக 16தோல்விகளின் பின் பெற்ற முதலாவது வெற்றி இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-2)

### உதைபந்தாட்டப் போட்டிக்கு

## இடையூறு விளைவிப்போர் தொடர்பாகபுதியசட்டவிதி

(ரோக்கியோ)

2002இல் ஜப்பானில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளின் இறுதிச் சுற்றின்போது காடையர்கள் நுழைவதை தடுக்கும் வகையிலான குடிவரவு சட்டமூலத்தை ஜப்பான் அமுல்படுத்தவுள்ளது.

ஜப்பானின் நாடாளுமன்ற கீழ்ச் சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ள இப் புதிய சட்டம் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் அமுலிற்கு வரவுள்ளது.

புதிய சட்டத்தின் படி ஏற்கனவே, சர்வதேச கால்ப் பந்தாட்ட போட்டிகளில் காடைத்தனங்களில் ஈடுபட்டு நாடு கடத்தப்பட்டவர்களுக்கு விசா மறுக்கப்படும் என்றும், போட்டிகளில் இடையூறுகள் விளைவிப்பவர்களுக்கும் இத் தடை பொருந்தும் என்றும் ஜப்பான் தெரிவித்துள்ளது. (உ 2)

## சனத் ஜெயசூரியா அளப்பெரும் சாதனை

[கொழும்பு]

இலங்கை கிரிக்கெட் அணித் தலைவர் சனத் ஜெயசூரியா தலைமையின் கீழ், உலகில் உள்ள அனைத்து டெஸ்ட் அந்தஸ்து பெற்ற நாடுகளையும் இலங்கை அணி வென்றுள்ளது.

99 இல் உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணி தோல்வியுற்ற பின்னர் ஜெயசூரிய அணித்தலைவராக நியமிக்கப்பட்டார்.

அதன் பின், அவுஸ்ரேலிய அணியையும் 99/2000 ஆண்டு காலப் பகுதியில் நியூசிலாந்து, சிம்பாவே ஆகிய அணிகளையும், 2000/2001 ஆண்டு காலப் பகுதியில்பாகிஸ்தான். தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, இந்தியா, பங்களாதேஷ் மேற்கு இந்திய தீவுகள் அணிகளையும் இலங்கை அணிவெற்றிகொண்டுள்ளது.

ஜெயசூரியாதலைமையில்24 போட்டிகளில் விளையாடி அவற்றில் 11 போட்டிகளில் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (உ-2)

# சங்கே முழங்கு

## உட்பூசல்கள் ஒழியட்டும்

யாழ், குடாநாட்டில்யாவரும் மெச்சத்தக்க விதத்தில் இயங்கி வந்த யாழ். கிரிக்கெட் நிர்வாக சபையில் உட்பூசல்களும் கருத்து மோதல்களும் இடம் பெற்றதினால் சங்கம் உருக்குலைந்து ஒரு அவல நிலையை எய்தியுள்ளது.

இந்நிலையை மாற்ற முற்பட்ட ஒரு சில பிரமுகர்களின் முயற்சிகள் எந்த வித பயனையும் அளித்ததாகத் தெரியவில்லை.

எனவே, யாழ். கிரிக்கெட் நிர்வாக சபைஇலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையுடன் இணைந்து இருப்பதால், அவர்கள் வெகு விரைவில் தலையிட்டு சபை உறுப்பினர்கள் பகிரங்கமாக ஒருவரை ஒருவர் அவதூறு கூறி வரும் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டும் என்று யாழ். கிரிக்கெட் ரசிகர்களும் பொது மக்களும் அபிப்பிராயப்படுகின்றனர்.

கப்டன் டீ. ஏ. எம். குணசிங்கம்
சுண்டுக்குளி

# ஆயிரத்திற்கு மேற்பட்ட தலிபான்கள் வடக்கு கூட்டணியிடம் சரணடைவு

## இரத்தஆறு ஓடும் அபாயம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் குண்டூஸ்நகரில் உள்ள தலிபான்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் நேற்று முன்தினம் வடக்குக் கூட்டணியினரிடம் சரணடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து மிகவும் நெருக்கடியான காலத்தை எதிர்நோக்கத் தயாராக இருக்கும்படி அமெரிக்கமக்களுக்கு அதிபர்புஷ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஒஸாமா பின்லேடனுக்கு ஆதரவான தலிபான்கள் சரணடைந்து வருகின்றபோதிலும் பாகிஸ்தானியர்கள் செச்சினியர்கள் மற்றும் அரேபியர்கள் தொடர்ந்தும் போரிடத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளனர். இதனால் அடுத்துவரும் சில தினங்களில் பெரும் இரத்த ஆறு ஓடும் அபாயம் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பின்லேடனின் தாக்குதலின் பின் தீவிரபாதுகாப்பிற்குள்ளாக்கப் பட்டு மீண்டும் பாதுகாப்பு தளர்த்தப்பட்ட அமெரிக்கா முன்னர் இருந்ததைவிட பாதுகாப்புக்குள்ளாகியுள்ளது. மேலும் சுற்றுலாசெல்லும் உள்நாட்டு பயணிகள் முக்கிய சுற்றுலாப்பகுதிகளுக்குச் செல்லப்பெரிதும் தயங்கிவருகின்றனர்.

இதேவேளை பின்லேடனினால் மீண்டும் அமெரிக்காவுக்கோ, அல்லது அதன் பொருளாதாரத்திற்கோ பங்கம்விளையுமானால்அமெரிக்க அரசிலிருந்து புஷ் விலக வேண்டிவரும் இல்லாவிட்டால் அதற்கிடையில் பின்லேடனையும் எஞ்சியுள்ள அவனது சகாக்களையும் விரைவில் அழித்தொழிக்க வேண்டும் என புஷ் நிருவாகத்தின் எதிர்க்கட்சியினர் கோஷம் எழுப்பிவருகின்றனர்.

இதனையடுத்து அமெரிக்காவின்நிலை அங்கும் இங்குமாக ஆட்டங்கண்டு வருகிறதுஎன தெரிவிக்கப்படுகிறது. (செ-7)

உலக தரிசனம்

## செய்திப் பரல்

★ அமெரிக்கா மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் எனக் கருதி 360 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

★ உலக வர்த்தக மைய தாக்குதலில் பலியானோர் தொகை 3682 என நியூயோர்க் நகர மேயர்அறிவித்துள்ளார்.

★ வடகொரியா 5000டன் உயிரணு இரசாயன யுத்தப்பொருட்களை வைத்திருப்பதாக தென்கொரிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

★ புளோரிடா ஸ்ட்ரெயிட்ஸில் வேகப் படகு கவிழ்ந்ததில் 30 பேர் உயிரிழந்துள்ளனர்.

★ ஒஸாமா பின்லேடன் உயிருடன் பிடிக்கப்படுவதை விட கொல்லப்படுவதையே தாம் விரும்புவதாக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பெல்ட் தெரிவித்துள்ளார். (செ-3)

### சுரங்க விபத்தில்

## பலியானோர் தொகை 45 ஆக அதிகரிப்பு

(பொஹாரா)

கொலம்பியாவில் தங்கச் சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட மண் சரிவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 45 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற இச்சம்பவத்தில் குறைந்தது 200 பேர் இச் சுரங்கத்தினுள் சிக்கியிருக்கலாம் எனநம்பப்பட்டபோதிலும்; இதுவரை 45 பேரின் சடலங்களே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஏனையவரின் பற்றி இதுவரை தெரியவில்லை.

எனினும் காணாமல்போனவர்களில் 20 பேரையே முழுச் சடலங்களாக மீட்கமுடியும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை தொடர்ந்து பெய்து வரும் மழையினால் ஏனைய சுரங்கங்களில் தொழிலாளர்களை இறங்க வேண்டாம் என்று அந்நாட்டு அரசு தொழிலாளர்களை கேட்டுக் கொண்டுள்ளது. (செ-7)

## வடக்கு கூட்டணியிடம் சரணடைந்த தலிபான்கள் ஆயுதங்களை ஒப்படைத்தனர்

(காபூல்)

குண்டூஸ்நகரில் சரணடைந் தலிபான்கள் ஏராளமான கனரக ஆயுதங்களையும் வாகனங்களையும் வடக்குக்கூட்டணியினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

8 டாங்கிகள், 5 விமான எதிர்ப்பு பீரங்கிகள் 7 றொக்கெட் செலுத்திகள் 40 வாகனங்கள் உட்பட ஆயுதங்கள் பலவற்றை வட அணியினரிடம் ஒப்படைத்தனர்.

இதேவேளை சரணடையாது குண்டூஸில்உள்ள தலிபான்களுக்கு வடக்கு கூட்டணியினர் 24 மணித்தியால கால அவகாசம் வழங்கியுள்ளனர்.

அப்படி சரணடையாவிட்டால் கடுந்தாக்குதலுக்குள்ளாகவேண்டிவரும்என்று வட அணியின்தளபதி முகமட் தாபூர் கூறியிருக்கின்றார். (செ-7)

அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையாது உலகு

குறள்

# வலம்புரி

## இனவாதம் புரிகிறது

புலிகளை ஆதரிப்போருடன், ஜே. வி. பி ஒரு போதும் கூட்டுச் சேராதென்று அக்கட்சியின் தலைவர் சோமவன்ஸ கூறியுள்ளார். பன்னிரண்டு வருடங்களின் பின்னர் நாடு திரும்பிய சோமவன்ஸ தனது முதலாவது தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு கூறியுள்ளார்-

சிங்கள இளைஞர்களின் படுகொலையுடன் சம்பந்தப்பட்டதாக கருதப்பட்ட சோமவன்ஸ தமிழ் மக்களின் விடயத்தில் நீதியான போக்கைக்கடைப்பிடிப்பாரென எதிர்பார்க்க முடியாதென்பது உண்மை. எனினும் ஜே. வி. பியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற முறையில் பேச்சுவார்த்தைநடத்தப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் பேசியேஇனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். எனவே அவர்களுடன் நிபந்தனையற்ற முறையில் பேச்சு நடத்தவேண்டுமென தனதுதேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருப்பதை ஒதுக்கி விட்டு புலிகளுடன் கூட்டுச்சேரும் கட்சிகளுக்கு ஜே.வி.பி ஒரு போதும் ஆதரவு வழங்காதென்று சோமவன்ஸ தெரிவித்திருப்பது, விசித்திரமாகவே யுள்ளது.

நாடுயுத்தத்தால் எரிந்து கொண்டிருக்கும் போது அப்பாவி உயிர்கள் அழிந்து கொண்டிருக்கையில் ஜே. வி. பி, சிஹல உறுமய போன்ற இனத்துவேஷக் கட்சிகள் இனவாதம் கக்குவது எரிகின்ற நெருப்புக்கு எண்ணெய் விடுவதாகவேயுள்ளது.

நீதி, சமத்துவம், சுதந்திரம் என்று போராடிய றோகணவின் தலைமையிலான ஜே. வி. பி இப்பொழுது தமிழர்களின் உரிமையைப் பறிப்பதில், அவர்களின் சுதந்திர மூச்சை அடக்குவதில் முனைப்பாக இருக்கிறதென்பது தெளிவாகியுள்ளது

இந் நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணியோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியோ ஆட்சிப்பீடம் ஏறினாலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது ஏனெனில்;

இரண்டு கட்சிகளில் எது ஆட்சிக்கு வருவதாகஇருந்தாலும், ஜே.வி. பியின் ஆதரவு அவசியம். இத்தகைய சூழ்நிலையில் சிங்கள அரசு இனப்பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு காணப்போவதில்லை.

# சமகாலப் பிரச்சினைகளை சொல்லும் போது சபையினர் உன்னிப்பாக அவதானிக்கின்றனர்

அன்று மாலை ஏழாலையில் அந்த நாற்சார் வீட்டை அடைந்தேன். அங்குதான் தென்னிலங்கைக் கலைஞர்களுடன் சோக்கல்லோ சண்முகம் தங்கியிருந்தார்.

என்னைக் கண்டதும் அன்புடன் வரவேற்ற சோக்கல்லோ சண்முகம் கலைஞர்களை அறிமுகம் செய்து வைத்தார்.

எமது பத்திரிகைக்காக நேர்காணல் இடம் பெற்றது. அதை இங்கு தருகிறோம்.

**பேட்டி சோக்கல்லோ சண்முகம்**

**உரையாடியவர் துரையர்**

1) கலைத்துறைக்கு உந்துகோலாக இருந்தவர் யார்? சந்தர்ப்பங்கள் என்ன?

**பதில்**

இது என்னுடைய தாயாராகத்தானிருக்க வேண்டும். என்னுடைய தாயார், மிகவறுமையான வாழ்க்கை வாழ்ந்தவர், அவர் என்னைமகிழ்ச்சிப்படுத்துவதற்கு எனக்குத்தந்த ஒரேயொரு பரிசு, பகலிலும் இரவிலுமாக கதைகள் சொல்வது. கதைகள் சொல்லி முடிகின்ற சந்தர்ப்பங்களில், பக்கத்து வீட்டுக்காரர்களை வைத்து கற்பனைக் கதைகளுஞ் சொல்வார். நான் நீண்டகாலம் தாய்ப்பாலருந்தியவன் என்னுடையதாயாரால் எனக்குஇலவசமாகத் தரக் கூடியதாகவிருந்தது. தாய்ப்பாலும், தமிழுந்தான்; அதுவே எனக்கு உந்துகோலாகவும், கலைத்துறைக்குவரும் சந்தர்ப்பங்களாகவும் அமைந்தன.

2) நீங்கள் முதலில் தனியாகத் தயாரித்த வடிவங்களெவை?.

**பதில்**

எனதுபத்துவயதில்ஏழாலை மேற்கு கலட்டியில் 'ஸ்ரீ முருகன்' என்ற நாடகத்தைப் போட்டேன். நுழைவுக்கட்டணம்பத்துசதமதான. அதைக் கூடத்தராமல், 'பொட்டுக்குள்ளால்' பார்த்தவர்கள் பலர் சேர்ந்த ஒருரூபா 50 சதத்தையும ஒரு நண்பர் கொண்டு சென்றுவிட்டார். எமது நாடகத்துக்கு கல்லெறியும விழுந்தது இதுஎனக்கு சுமார் ஐயபத்து மூன்று வருடத்துக்கு முன்பு கிடைத்த அனுபவமாகும். அதன் பிறகு பல நாடகங்கள், நகைச்சுவைக் கதம்பங்கள்தயாரித்து மேடையேற்றினோம்.

3) நீங்கள்தயாரித்தவில்லுப்பாட்டுகளில் சமூகம் சார்ந்தவைகளா, புராணம் சார்ந்தவைகளா மக்களைக கவர்ந்தவை?

**பதில்**

இரண்டையுமே மக்கள் விரும்புகிறார்கள். அதைநாங்கள் கொடுக்கின்ற விதத்தில் தான் அதற்கான வரவேற்பு இருக்கின்றது.

4) வில்லுப் பாடல்களில் சினிமா மெட்டுக்களைப் பயன்படுத்துவதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம? இதில் நீங்கள் சந்தித்த அனுபவங்கள் எவை?

**பதில்**

தேவாரம், திருவாசகங்கள் ட சினிமாவில்வந்திருக்கின்றன. பாரதியார் பாடல்கள் சினிமாவில் பல்வேறுவிதமாக பாடப்பட்டுள்ளன. நாங்களும் எங்களுக்கேற்ற விதத்தில மெட்டமைத்துப் பாடுகின்றோம். சினிமாவில் வந்ததென்பதற்காக அதை நாங்கள் தவிர்ப்பதில்லை. ஆபாசமான இரட்டைக் கருத்துக்களைக் கொண்ட வசனங்களையோ, பாடல்களையோ நாம் மெல்லிசையில்சேர்த்துக் கொள்வதில்லை. சினிமா ஒரு சிறந்த ஊடகம். நல்லவற்றை சினிமாமூலம் தருவதன்மூலம மக்களை நெறிப்படுத்துவதற்கு இது ஒரு சிறந்த சாதனமாகும. வில்லிசையில நாம் எந்த விதமான பாதகமான அனுபவங்களையும் இதுவரை அனுபவிக்கவில்லை.

5) சமகாலப் பிரச்சினைகளை வைத்து 'வில்லுப் பாட்டு' சொல்லி வந்துள்ளீர்கள். இதனாலேற்பட்ட சாதகபாதகங்கள?

**பதில்**

சமகாலப்பிரச்சினைகளைச் சொல்லுகின்ற பொழுதுசபையினர் மிக உன்னிப்பாக அவதானிக்கின்றனர். அதற்கான நன்மையான பலன்களை நாங்கள் உடனடியாகவும் அனுபவித்துள்ளோம்.

6) இற்றைவரை எத்தனை வில்லுப்பாட்டுக்கள்செய்திருக்கிறீர்கள? அவற்றுள் மக்களைக் கவர்ந்தவை எவை?

**பதில்**

நாங்கள் 'சக்தியின்மகிமை'யையும், கவிராஜன்கதையையும்கண்மணியாள்காதையையும் இதுவரை தந்தளித்திருக்கிறோம். எல்லாக் கதைகளுமே மக்களுடைய ஆதரவைப் பெற்றவையே 'கவிராஜன் கதையை' செய்கின்றபொழுது எம்மிடையே உத்வேகங்களும் உணர்ச்சிவசங்களும் ஏற்படுவதை நாம் மேடையிலே அடிக்கடி அவதானித்துள்ளோம்.

7) அண்மையில் நான் பார்த்த நாடகத்திலே உங்களின் நடிப்பின் முதிர்ச்சி தெரிந்தது? நீங்கள் ஏன்தொடர்ந்துநாடகங்களில் ஈடுபடக் கூடாது?

**பதில்**

நாடகங்களில் நடிப்பது எனக்கு நல்ல விரும்பம் 'கோடையும்' எந்தையும் தாயும், பிறந்தமண்' ணும் எனக்கு நல்ல புகழைத்தேடித்தந்தன வில்லிசைக்குழுவைக் கட்டிக் கட்டிக்காப்பதே எமக்குப் பெரிய வேலையாக இருக்கின்றது. நாடகங்களில் நடிப்பதும், தயாரிப்பதும் எமக்கு பெரு விருப்பாக இருந்த போதும், கலைஞர்களுக்கே இயற்கையாகவுள்ள பணமுடை, அதில் ஈடுபடவிடாது தடுக்கின்றது.

8) நீங்கள் தென்னிலங்கைக் கலைஞர்களுடன் 'யாழ். நகர்' வந்துள்ளீர்கள உங்களுக்கு இங்கு கிடைத்த அனுபவங்கள?

**பதில்**

அநேகமாக வடக்கிலிருந்து தெற்கு நோக்கிப் போய்த்தான் கலை நிகழ்ச்சிகளை நடத்துகிறார்கள. நாங்கள் தெற்கிலிருந்து யுத்தப்பிரதேசத்தில் வாழுகின்றமக்களுக்கு கலை நிகழ்ச்சிகளை அவர்களது கிராமங்களில நடத்திக்காட்டவே வந்தோம. தமிழ் மக்களுடைய பாரம்பரிய வடிவமான இந்த வில்லிசை காலகதியில் மறைந்து போகாமலிருப்பதற்காக நாமும் எமது சிறு பங்களிப்பை செய்கின்றோம். திருப்பூங்குடி ஆறுமுகமும், சின்னமணி குழுவினரும, ஸ்ரீதேவி வில்லிசை, ஸ்ரீதா வில்லிசை சக்திதாசன் வில்லிசை உட்பட இன்னும பல புகழ் பூத்தக் கலைஞர்கள் வில்லிசையை நடத்திய இந்த மண்ணில்நாமும்வில்லிசையை செய்தோம் என்பதில பெருமை அடைகிறோம. தாவடியும், மாதனையும் எமக்குநல்லவில்லிசைக் கலைஞர்களைத் தந்துள்ள கிராமங்களாகும. எமக்கு உடனடியாக, நினைவுக்குக்கொண்டுவரமுடியாது வாழ்ந்திருப்பதும், வாழ்வதும் எமக்குத் தெரியும். அவர்களனை வரையும் கரம் கூப்பித் தொழுகின்றோம். யாழ்ப்பாணத்தில் எமக்கு பல்வேறிடங்களிலும் மிகச்சிறப்த வரவேற்பு கிடைத்தது. எம்முடைய குழுவிலே மிகச்சிறந்த பரம்பரைக் கலைவடிவங்களில் இன்றைக்கு ...ற்றிவரும் மணிமேகலை ... நாதனும ஜெயந்தி ... புங்குடியும் ஹார்மோனிய சக்கரவர்த்தி கந்த சிவராஜாவும், இளம் கலைஞர் செல்வி பாரதி சுப்பையாவும், வில்லிசைவேந்தர் லடிஸ் வீரமணியின் புதல்வர் டைட்டஸ்வீரமணியுமயாழ்ப்பாணத்திலிருந்து மிருதங்க சக்ரவர்த்தி பாலசந்திர சர்மா, புல்லாங்குழல் வித்துவான் சிவசுப்பிரமணியம்அவர்களும் எம்மோடு இணைந்து கொண்டார்கள். தெற்கையும், வடக்கையும் இணைத்துக் கொண்டு யாழ் மண்ணிலே பல நிகழ்வுகளைவெற்றிகரமாக நடாத்திய திருப்தியுடன். உங்களிடம் இருந்து தற்காலிகமாக விடைபெற்றுக் கொள்ளுகிறோம்; வில்லுப் பாட்டில் இப்பொழுது நடைமுறையில் இல்லாதஎமது பாரம்பரிய இசை வடிவங்களை வில்லிசையில் சேர்த்துக் கொண்டால் இசைக்குச் செய்த தொண்டாகுமென நீங்கள குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதை நாங்கள் ஏற்கெனவே செய்து வருகிறோமென்பதை உங்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம். என்னுடைய எழுத்துப் பணி பற்றிக் கேட்டிருக்கிறீர்கள்.

1956 ல் மலையகத்தில் கோமதியின் 'கணவன்' என்ற எனது நாவலை வெளியிட்டுப் பணியை ஆரம்பித்தேன். பின்பு என்னை இப்போது பேட்டி காண்கின்ற நீங்களே பிதாமகனாக விருந்த யாழ். இளம் எழுத்தாளர் சங்கத்தில் இணைந்து செயல்பட்டேன். சிற்பி சரவணபவன் அவர்களை ஆசிரியராகக்கொண்ட 'கலைச்செல்வி'யில் வேலை செய்தேன் ...ன்னிரெண்டு சதப் பத்திரிகயான 'சானா' ... பல ஆண்... நானும் ஆனைக்கோட்டை ...மு சண்முகநாதனும் இணைந்து ந...த்தி ... இன்றும் எழுத்துப் பணி தொடர்கின்றது. ஆனால் வில்லிசையிலேயே நங்கள் கூடிய கவனம் செலுத்தி வருகின்றோம். எமக்கு முக்கியத்துவம் கொடுத்து யாழ் மண்ணில் வைத்து இந்தப் பேட்டியைக் கண்டு உங்கள் மேலான பத்திரிகையில் வெளியிடுவதற்கு எமது நன்றியைக் கூறுகின்றோம். □

## தினசரி தியானம்

## நாராயண சேவை

ஆதிமுதலாகி நின்ற அரியென்ற அட்சரத்தை
ஓதியறிந்துள்ளே உணர்வதினி எக்காலம்?

பத்திரகிரியார்

நரர்கள் எல்லாரும்நாராயண சொரூபங்கள்என்று அவர்களைப் போற்றுவோனாக.

ஆலயத்தின் கண் எழுந்தருளப் பண்ணியிருக்கும் மூர்த்தியை ஆராதிப்பதன் மூலம் ஆராதனை முறையைக் கற்றுக் கொள்கிறோம். பின்பு நாம் தொடர்பு கொள்ளும் உயிர்கள் அனைத்துக்கும் உளன்போடு பணிவிடை செய்தல் வேண்டும். உயிர்களிடத்து நாம் கொண்டுள்ள இணக்கமே இறைவணக்கம்இறைவணக்கம் என்னும்பெயர் பெறுகிறது.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்.

சுகாதாரச் சீர்கேடான வகையில்

## உணவு விற்பனை செய்த மூவரிடம் தண்டப்பணம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

சுகாதாரச் சீர்கேடான முறையில் உணவுப் பொருட்களை விற்பனை செய்த வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மூவர் தொடர்பான வழக்குகள் யாழ். நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது சம்பந்தப்பட்டவர்களிடம் இருந்து தலா 5 ஆயிரம் தண்டப்பணமாக அறவிடப்பட்டது.

செ. சிவசுப்பிரமணியம்- உரும்பிராய் கிழக்கு, அ. ஜெயரட்ணம் - உரும்பிராய் கிழக்கு. ந. கோகுலன் - நீர்வேலி மேற்கு ஆகிய மூவர் தொடர்பாக உரும்பிராய் பொது சுகாதாரப் பரிசோதகர் மேற்படி வழக்கைத் தாக்கல் செய்தமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

## அ. அட்டை கண்டெடுப்பு

ஒட்டகப்புலம், வசாவிளான் என்னும் முகவரியைச் சேர்ந்த மேரி றோஸ்மலர், அன்ரனி இம்மானுவேல் என்பவருடைய விசேட அடையாள அட்டைகண்டெடுக்கப்பட்டு, வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும். [செ]

# எஸ். பி. ஓ. ஆக கடமை ஆற்றிய பலருக்கு எழுதுநர் நியமனம்

[யாழ்ப்பாணம்]

கடந்த காலங்களில்தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் தலைமை தாங்கும் அதிகாரிக ளாகக் (எஸ்.பி.ஓ) கடமை யாற்றிய பலருக்கு இம்முறை வாக்களிப்புநிலைய எழுதுநர் களாக நியமனம் வழங்கப்பட் டுள்ளது

இதனால் அவர்கள்தேர்தல் கடமையில் ஈடுபட பின்னடிப் பதாக தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அச்சுறுத்தல் மத்தியில் முன்னைய காலங் களில் யாழ் மாவட்டத்தில் தேர்தல் நடைபெற்ற போது வாக்களிப்புநிலைய தலைமை தாங்கும் அதிகாரிகளாக பணி புரிய பல சிரேஷ்ட அதிகாரி கள் அஞ்சிஅதனை தவிர்த்து வந்தனர் ஆனால் இம் முறை நடைபெறவுள்ள தேர்தலில் பாதுகாப்பு அச்சுறுத்தல் தணிந்துள்ள காரணத்தால் பல சிரேஷ்ட அதிகாரிகள் தலைமை தாங்கும்அதிகாரிக ளாகப் பணிபுரிய முன் வந் துள்ளனர்.

இதனாலேயே முன்னைய காலத்தில் தலைமை தாங்கும் அதிகாரிகளாகக் கடமையாற் றிய தமக்கு இம்முறைஎழுது நர் நியமனம் வழங்கப்பட்டு ள்ளதாக பாதிக்கப்பட்டவர் குற்றஞ் சாட்டியுள்ளனர்(இ]

## தேர்தல்வன்முறை 1250ஆக உயர்வு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்த லுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டதினத்திலிருந்து நேற்றுவரை தேர்தல் வன் முறைகள் 1250ஆக அதிகரித் துள்ளதாக தேர்தலைக் கண் காணிக்கும்பொலிஸ்தலைமை யகம் அறிவித்துள்ளது.

ஐக்கியதேசியக்கட்சி 937 முறைப்பாடுகளையும், பொது ஜனஐக்கியமுன்னணி429 முறைப்பாடுகளையும் மக்கள் விடுதலை முன்னணி 61 முறைப்பாடுகளையும் சிறி லங்காமுஸ்லிம்காங்கிரஸ் 38 முறைப்பாடுகளையும் பதிவு செய்துள்ளதாக தேர்த லைக்கண்காணிக்கும் பொ லிஸ் தலைமையகம் மேலும் அறிவித்துள்ளது. (ந-4)

## 'வான் முழக்கம்'

மாதாந்த சஞ்சிகை

## வெளியீட்டு விழா

ஆக்கியோன் வே. தவச்செல்வன்
(I. B C யாழ். நிருபர்)

இடம்:- நூலக கேட்போர் கூடம்
யாழ். பல்கலைக்கழகம்

காலம்:- 26 . 11 . 2001 திங்கட்கிழமை
பி. ப. 3-30 மணி

அனுசரணை: யாழ் பல்கலைக்கழக
கிளிநொச்சி மாவட்டமாணவர்
ஒன்றியம்.

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

கிளி. மாவட்ட மாணவர் ஒன்றியம்
யாழ். பல்கலைக் கழகம்

(4007)

ஐ.தே.க

சியக் கட்சி ஆதரவாளர் ஒரு வர் கொல்லப்பட்டதுடன் மே லும் இருவர் காயமடைந் துள்ளனர்.

இதேவேளை அனுராதபுர திசாகம பகுதியில் இரு சாரா ரிடையேயும் ஏற்பட்ட மோ தலில் பொதுஜனஐக்கியமுன் னணி ஆதரவாளர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் மே லும் மூவர் காயமடைந்துள் ளனர்.

திசாகம பகுதி முழுவதும் பதற்றம் லவுவதாக தெரி விக்கப்படுகிறது. (ந-4)

தேர்தல்

சட்டத்தின்பிடியில் இருந்து ஒருபோதும் தப்பமுடியாது நாம்ஆட்சிக்கு வந்ததும்அவர் மீதுசட்டநடவடிக்கை எடுப் போம் என்றும் கூறியுள்ளார். (வ)

ஐ தே.கவுக்கு

லான வாக்குகளை பெற்று கூடிய ஆசனங்களைக்கைப்பற் றும் நிலையில் உள்ளது.

கிராமப்புற மக்களினதும், நகர்ப்புறமக்களினதும் வாக்கு வங்கியை முறையே பொது ஜனஐக்கிய முன்னணியும் ஐக் கிய தேசியக்கட்சியும் தம தாக்கிக்கொண்டாலும், அறு திப் பெரும்பான்மைக்கு ஜே. வி.பியினதும், தமிழ் எம்பிக் களினதும் ஆதரவு முக்கியம் தேவைப்படும் என அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளி யிட்டுள்ளனர்.

தென்னிலங்கையில் மூன் றாவது சக்தியாக உருவெ டுத்து வரும் ஜே வி.பி இம் முறை கடந்த தேர்தலைவிட கூடுதல் ஆசனங்களைக் கைப் பற்றுவதுடன் பொதுஜனஐக் கிய முன்னணியுடன் சேர்ந்து

ஐ தே கட்சியின்

வதாக எழுத்துமூலம் அறி வித்துள்ளார்.

தமிழ்க்கட்சிகளிடையே ஏற் பட்டுள்ளகூட்டு மற்றும்தமிழ் மக்களின் நன்மை கருதியே தான் தேர்தலிருந்து விலகிக் கொள்வதாக அவர் அறிவித் துள்ளார்.

இதேவேளை கிழக்கு மாகா ணத்தில்இராஜசிங்கம்படைப் பிரிவு சிங்கள பேரினவாதக் கட்சிகளுக்கு துணைபோகக் கூடாதென எச்சரித்திருந் தமை குறிப்பிடத்தக்கது.(இ

இன்று

அவரின் பிறந்த நாளை யொட்டி உலகத் தமிழ் மக்கள் தமது வாழ்த்துக் களைத் தெரிவித்துள்ளனர்.

ஆட்சியமைக்கக் கூடும் என வும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்

# தொண்டர் மற்றும்பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் ஈ.பி.டி.பிக்கு ஆதரவாம்

எமக்கான நியமனங்கள் கிடைக்கிறதோ இல்லையோ தெரியாது ஆனால் இந்த நிய மனங்களைப் பெற்றுத்தர வேண்டும் என்பதில் அக்கறை காட்டி ஆர்வமுடன் ஈ பி டி பி. யும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும்பாடு பட்டதை மறக்க முடியாது இந்த அக்கறையுடனான ஆர் வத்திற்கு நன்றியாக நாங்கள் ஈ.பி.டி.பி யைஆதரிக்கக் கட மைப் பட்டுள்ளோம்.

இவ்வாறு தொண்டர் ஆசி ரியர்கள் மற்றும் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் நேற்றுக் காலை அமைச்சு அலுவலகத் தில் டக்ளஸ் தேவானந்தா வைச் சந்தித்துப்பேசியபோது தெரிவித்தாக ஈ பி.டி.பியினர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளனர் அதில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப் பதாவது.

சுமார் எழுநூறுபேர் வரை யில் கலந்து கொண்ட இச் சந் திப்பில் ஆசிரியர்களின் பிரதி நிதிகள் மேலும் கூறுகையில் இன்று தேர்தல் காலத்தில் மட்டும் வந்து கூடாரமடித் துள்ளசிலர்பல்வேறு விதமான கருத்துக்களைக் கூறுகின்றனர் வேலை வாய்ப்புக்கள் அற்ப சொற்பசலுகைகள் என்கின்ற னர் சிலர் அமைச்சர் வழங்கும் நியமனங்கள் ரத்துச் செய்யப் படுமென்று அச்சுறுத்துகின்ற னர் சிலர். ஆனால் இவர்கள் எல்லாம் ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும் ஈ பி.டி பி காட்டிய வழியினைப் பின் தொடர்ந்து தான்இவர்களது அரசியல் பயணம் நடக்கின் றது.

இங்கு குழுமியிருப்பவர்க ளில் சிலர் கூட வெவ்வேறு அரசியல் எண்ணங்களைக் கொண்டிருக்கலாம். ஆனால் நான்கு ஆசனங்கள் மட்டுமே கடந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து பெற்றுக்கொண்ட ஈ.பி.டி.பி மற்றெல்லாக் கட் சிகளையும்விட குறுகியகாலத் தில் பெருமளவு பணிகளை முன்னெடுத்துள்ளது இதற்கு அவர்களது அர்ப்பணிப்புட னான உழைப்பும் ஆற்றலும் தான் காரணம். இதனை உணர்ந்து கொண்டு ஈ பி டி. பியைப் பலப்படுத்தும் வகை யில் ஈ பி டி, பிக்கு வாக்க ளிக்கவேண்டும் எனவும் கேட் டுக்கொண்டனர்.

## பிரசாரம் நிறுத்தம்

(வவுனியா)

வன்னிப்பெருநிலப்பரப்பில் கொண்டாடப்படவுள்ள மாவீரர் எழுச்சி விழாவை ஒட்டி நான்கு தமிழ்க்கட்சி களின்கூட்டமைப்பினர் தமது தேர்தல்பிரசாரத்தை நாளை யும், நாளை மறுதினமும் நிறுத்தியுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

வவுனியாவில் ஆப்தீன்கபீர் முகமதுதலைமையில் போட்டி யிடும் முஸ்லிம் சுயேட்சைக் குழுவொன்றும் தனது தேர் தல் பிரசாரத்தை இரு தினங் களுக்கு நிறுத்தியுள்ளது.

இதேவேளை புளொட் அமைப்பு யாழ்ப்பாணத்தி இருதினங்கள் தேர்தல பிரசா ரத்தை நிறுத்தியுள்ளதாக அவ் அமைப்பைச் சேர்ந்த அன்ரன் பொன்னையா அறி வித்துள்ளார். (ம)



தியாக மாமனிதர்

# அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

## தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு

"தமிழர்களாகிய நாம் சிங்களவர்களின் தயவில் தங்கி
வாழ்வதற்குப் பிறக்கவில்லை அல்லது சிங்களவர்களினால்
கொடுக்கப்படுவதைப் பெற்று வாழ்வதற்குப் பிறக்கவில்லை
இந்த நாட்டின் ஒரு பகுதி சிங்கள மக்களுக்குச் சொந்தமாக
இருப்பது போல ஒரு பகுதி தமிழர்களுக்கும் உரிமையானது"

– தன்மானத் தமிழன் குமார்.

யானையும் வேண்டாம் வீணையும் வேண்டாம்
வீர சுதந்திரமே வேண்டி நிற்கின்றோம்

பயங்கரவாதம் இந்தப் பக்கத்தில் இல்லை அந்தப்பக்கத்தில்
தான் உண்டு என்பதை எடுத்து விளக்குவோம்

**திரு. அப்பாத்துரை விநாயகமூர்த்தி** இல: 1

**திரு. சி. வி. கந்தையா சிவஞானம்** இல: 5

**திரு. கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம்** இல: 8

**உன்னத உயிர்த் தியாகங்களை மதிப்போம் தியாக தீபங்களைப் போற்றுவோம் அவர் இலட்சியம் வெல்ல உழைப்போம்.**

தமிழர் விடுதலைக் கூட்டணி

எங்கள் விருப்பு வாக்குகள்
மூன்றும்
தன்மானத் தமிழர்க்கே

1 (X) 2 3 4 5 (X) 6 7 8 (X) 9 10 11 12

(3946)

இப்பத்திரிகைவலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல; 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு நவம்பர் மாதம் 26ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.